# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600 032.
தொலைபேசி: 044-22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


## தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை அவர்கள் முன்பாக

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*************

முறையீட்டு மனு எண்.0201/2015

ஆணை எண்.0004/2015

நாள்:18/09/2015

திரு.இரா. சிங்கார வேல்,
துணைத் தலைவர்,
சோழம்பட்டு ஊராட்சி & அஞ்சல்,
சங்கராபுரம் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்.

- முறையீட்டு மனுதாரர்

திருமதி சித்ரா,
ஊராட்சி மன்றத் தலைவி,
சோழம்பட்டு ஊராட்சி & அஞ்சல்,
சங்கராபுரம் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்.

- எதிர் மனுதாரர்

விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், சோழம்பட்டு ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் திரு.இரா. சிங்காரவேல் மற்றும் மேற்படி ஊராட்சி மன்ற உறுப்பினர்களும் கையொப்பமிட்டு மனுவில், சோழப்பட்டு ஊராட்சி மன்றத் தலைவி திருமதி. சித்ரா மற்றும் அவரது கணவரும் கூட்டாக செய்துவரும் முறைகேடுகள் குறித்து நடவடிக்கை எடுக்கக்கோரி இம்முறைமன்ற நடுவத்திற்கு முறையீட்டு மனு ஒன்றை அனுப்பியுள்ளனர். மேற்படி முறையீட்டு மனு 14.09.2015 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 201 எண்ணிட்ட புகார் மனுவாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

## ஆணை

சோழம்பட்டு ஊராட்சி மன்றத் தலைவி திருமதி. சித்ரா மற்றும் அவரது கணவர், மேற்படி ஊராட்சி மன்ற நிர்வாகத்தில் செய்துவரும் முறைகேடுகள் குறித்து புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப் பிரிவு 2க்குட்பட்ட உட்பிரிவுகள் (7) மற்றும் (11)–ல் உள்ளாட்சி அமைப்புகள் (ம) பொதுப்பணியாளர் என்பதற்கு அளிக்கப்பட்ட விளக்கத்தில் ஊராட்சி மன்ற அமைப்பு மற்றும் ஊராட்சி பிரதிநிதி இடம் பெறவில்லை. எனவே, மேற்படி மனுதாரர் அனுப்பிய புகார் மனு முறைமன்ற நடுவரின் விசாரணை வரம்பிற்கு உட்படாது. எனவே, மேற்படி புகார் மனு மீது நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு புகார் மனுவினை விழுப்புரம் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பிவைக்க தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர் அமைப்பு ஆணையிடுகிறது.

ஒம்/– முனைவர் சோ. அய்யர்
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

//உண்மை நகல் / உத்தரவின்படி / அனுப்பப்படுகிறது//

18/9/15

கண்காணிப்பாளர்

பெறுநர்

மாவட்ட ஆட்சியர்,
விழுப்புரம் மாவட்டம்.
விழுப்புரம் (இணைப்புடன்)

நகல்

திரு.இரா. சிங்கார வேல்,
துணைத் தலைவர்,
சோழம்பட்டு ஊராட்சி & அஞ்சல்,
சங்கராபுரம் வட்டம்–606208,
விழுப்புரம் மாவட்டம்.